**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 65** **நாள்: 07.06.2017**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் சொத்துகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான புவிசார் தகவல் தொழில்நுட்ப வரைபடம் தயாரிக்கும் பணி நடைபெற உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து சொத்துகள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான புவிசார் தகவல் தொழில்நுட்ப வரைபடம் தயாரிக்கும் பணி பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் இன்று (07.06.2017) முதல் நடைபெற உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் புவிசார் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் (Geographical Information System) கட்டிடங்களின் (குடியிருப்புகள், வணிகவளாகங்கள் மற்றும் மத்திய அரசு/ மாநில அரசு/ தனியார் கட்டிடங்கள்) அமைவிடம் மற்றும் வழங்கப்பட்டு வரும் பொது சேவைகள் (தெரு விளக்குகள், சாலைகள், பூங்காக்கள் மற்றும் மழைநீர் வடிகால்வாய்கள் போன்றவை) ஆகியவை வரைபடமாக தொகுக்கப்பட உள்ளது. இந்த தொழில்நுட்ப சேவையானது பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இதர சேவைத் துறைகளின் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் ஒரு அங்கமாக கட்டிடங்களின் உபயோகங்கள் மற்றும் வழங்கப்படும் சேவைகளின் விவரங்கள் தொகுக்க களப்பணியாளர்கள் வீடுதோறும் அளவீடுகள் மேற்கொள்ள உள்ளனர்.

இதன்மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சேவைகளான திடக்கழிவு மேலாண்மை, சாலை வசதி, தெருவிளக்குகள் மற்றும் மழைநீர் வடிகால்வாய்கள் ஆகியவற்றை மேம்படுத்தவும், இதர சேவை துறைகள் வழங்கி வரும் சேவைகளான குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புகள், தீயணைப்பு மற்றும் மீட்பு பணி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

இத்தகவல் பெறுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் தலா 2 பேர் கொண்ட 15 குழுவினர் ஒவ்வொரு வார்டிலும் களப்பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இப்பணிக்கு வரும் களப்பணியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் புகைப்படத்துடன் கூடிய அடையாள

அட்டை, பெருநகர சென்னை மாநகராட்சி முத்திரை பதித்த தொப்பி மற்றும் ஒளிரும் ஆடையுடன் பணியில் ஈடுபட உள்ளனர். **பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. முதற்கட்டமாக இராயபுரம் மண்டலம் வார்டு–57, கோடம்பாக்கம் மண்டலம் வார்டு–136, அடையாறு மண்டலம் வார்டு–172 ஆகிய பகுதிகளில் இன்று (07.06.2017) முதல் வரைபடம் தயாரிக்கும் பணியில் களப்பணியாளர்கள் ஈடுபடவுள்ளனர்.** பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 12,02,834 சொத்துவரி மதிப்பீடுகளில், தற்போது இராயபுரம் மண்டலம் வார்டு–57ல் 8,747 சொத்துக்களும், கோடம்பாக்கம் மண்டலம் வார்டு–136ல் 10,414 சொத்துக்களும், அடையாறு மண்டலம் வார்டு–172ல் 6,076 சொத்துக்களும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

களப்பணியாளர்கள் வீடுதோறும் வருகை புரிந்து விவரங்கள் கோரவும், அளவீடுகள் மேற்கொள்ளவும் உள்ளனர். சென்னை பெருநகரில் வசிக்கும் மக்கள் இப்பணியாளர்கள் கோரும் விவரங்களை அளித்து உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சேகரிக்கப்படும் விவரங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் மட்டுமே இருக்கும். மூன்றாம் நபர்கள் இவ்விவரங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதியின்றி பெறவோ / உபயோகிக்கவோ இயலாது.

இது தொடர்பாக பொதுமக்களுக்கு விவரங்கள் ஏதேனும் தேவைப்படுமாயின், கீழ்க்கண்ட மண்டல அலுவலர் / மண்டல செயற்பொறியாளர் / மண்டல உதவி வருவாய் அலுவலர் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் அல்லது பெருநகர சென்னை மாநகராட்சி புகார் பிரிவு(1913)ஐ தொடர்பு கொண்டு விவரங்கள் அறிந்து கொள்ளலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**